**MINUTES OF THE PUBIC HEARING MEETING CONDUCTED FOR OBTAINING EVIROMENTAL CLEARANCE FROM THE MINISTRY OF ENVIRONMENT, FOREST AND CLIMATE CHANGE FOR THE PROPOSED ROUGH STONE QUARRY OF THIRU. A.DASARATHAN OF 2.88.5 HECT (TOTAL CLUSTER AREA 13.07.0 HECT) LOCATED IN S.F.NO. 186/1,190/2B1 & 190/2B2 AT KUNDIYANTHANDALAM VILLAGE, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT, HELD ON 30.10.2021 AT 11.15 AM IN M/s. V.K.P MAHAL KANCHIPURAM – VANDAVASI ROAD, DHARMAPURAM, VEMBAKKAM TALUK, TIRUVANNAMALAI DISTRICT.**

Present:

| | | |
|---|---|---|
| 1. | Thiru.R.Muthukumarasamy | District Revenue Officer,<br>Tiruvannamalai District,<br>Tiruvannamalai. |
| 2. | Thiru.T.P.Viswanathan | District Environmental Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 3. | Thiru. N. Vijayaraj | Revenue District Officer,<br>Cheyyar Division,<br>Tiruvannamalai. |
| 4. | Dr.S.Sugashini | Assistant Engineer,<br>Tamilnadu Pollution Control Board,<br>Tiruvannamalai. |
| 5. | Dr. P. Thangaraju | The Geologist and Consultant,<br>M/s. Geo Exploration and Mining Solutions,<br>Salem. |
| 6. | Publics and Environmentalists | 54 Nos. (List enclosed). |

**The District Environmental Engineer, Tamilnadu Pollution Control Board, Tiruvannamalai.**

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai has welcomed the District Revenue officer, Tiruvannamalai, General Public, Environmentalists and other Government Officials for the Public Hearing meeting for the proposed rough stone quarry.

For obtaining the environmental clearance from the State Environment Impact Assessment Authority, the public hearing meeting is being conducted today for the proposed quarry of M/s. A. Dasarathan Rough Stone Quarry in 2.88.5 hect at Kundiyanthandalam Village, Vembakkam Taluk, Tiruvannamalai District.

As per the Environment (Protection) Act and the Environmental Impact Assessment Notification 2006, it is mandatory to conduct public hearing where the opinions of the public will be obtained through oral/or in written statement, the happenings will be recorded and will be submitted to the State Environment Impact Assessment Authority for the mining projects (Individual or Cluster extent) above 5 hect of area. The public notice for this public hearing scheduled on 30.10.2021 was published in the Times of India & Dinakaran on 28.09.2021 with the approval of the District Collector, Tiruvannamalai for the proposed quarry of M/s. A. Dasarathan Rough Stone and Gravel Quarry.

Further, the District Environmental Engineer has informed that on behalf of project proponent, Dr. P. Thangaraju, the Geologist and Consultant, M/s. Geo Exploration and Mining Solution, Salem will explain about their proposed quarry project and Environmental Impact Assessment Study report through a power point presentation. After that, public can express their views, suggestions and comments one by one either in oral or in written on the said project. The opinions & suggestions of the public's & Environmentalist will be recorded and submitted to the State Environment Impact Assessment Authority.

**Presentation by Dr. P. Thangaraj, The Geologist and Consultant, M/s. Geo Exploration and Mining Solution, Salem.**

Dr. P. Thangaraj, The Geologist and Consultant, M/s. Geo Exploration and Mining Solution, Salem has welcomed the District Revenue Officer, the District Environmental Engineer, General Public, Environmentalists and other Government Officials on behalf of above project proponent and explained the details of the project with help of power point presentation.

**Assistant Engineer, Tamil Nadu Pollution Control Board, Tiruvannamalai.**

Assistant Engineer, TNPCB has requested the public to express their views/suggestions/comments in oral or written statement one by one after giving their name and address.

**1.Thiru. Lakshmanan, Kundiyanthandalam.**

He said he does not have any objection for this proposed quarry project.

**2. Thiru. Gnanaprakasam, Ex Panchayat President, Kundiyanthandalam.**

He said he does not have any objection for this proposed quarry project. He informed that the road to the Elacheri Hospital is damaged and requested to rectify the damages in the road. Further he said that quarry proponents are not giving prior announcement for blasting of rocks and requested to monitor the above.

**3. Thiru Suresh Babu, Sothiyambakkam.**

He requested to rectify the damage in the hospital road located between the Chinna Elacheri and Kundiyanthandalam. He said he did not know how many quarries would be allowed on that road? Further he informed that dust emission was more due to the quarry vehicles. He requested to rectify the damage in the road between the Mamandoor and Kundiyanthandalam. The road already provided is suitable for public uses only and it is not suitable for the movement of quarry vehicles. He requested to rectify the road damages using mineral fund.

No trees were planted around the quarry and no medical camp was held as said to be held once in three months. If they do, it will be useful. He requested to distribute the mineral fund to the villages located around the Kundiyanthandalam village.

**3.Thiru.Arumugam, Chinna Elacheri.**

He said that due to the quarries, 10 villages were affected and roads were highly damaged. He said we have been suffering for 20-30 years. He asked why are you giving permission to quarries around these villages? Quarry vehicles are plying without a proper license. The quarry owners bought 50-60 acres of land, and not letting to do agricultural activity and threatening to sell our land. He requested to take appropriate action in this regard. On behalf of publics, came and registered these views/comments.

**4.Thiru. Rajaram, The President, Kundiyanthandalam.**

He informed that already resolutions were made to rectify the road in the Kundiyanthandalam and soon that road damages will be rectified. He informed that the mineral fund should not been distributed to other villages located around

kundiyanthandalam. He requested that the funds will be given for Kundiyanthandalam village alone.

**Thereafter no views/comments were raised.**

**<u>The Assistant Engineer, TNPCB, Tiruvannamalai</u>**

This public hearing process was ended with the vote of thanks by Assistant Engineer, Tamilnadu Pollution Control Board, Tiruvannamalai.

**<u>Enclosures:</u>**

1. Copy of press release (Public Notice published in the daily News paper Tamil & English dated 28.09.2021 for notifying the public hearing meeting.
2. The certificate issued by the Village Administrative Office for the Tom Tom and issue of notices.
3. Attendance sheet at the public hearing (Total pages 4 & 54 persons)
4. Audio & Video (DVD – Disc 1) of the public hearing proceedings.
5. Photographs of the public hearing proceedings
6. Soft and Hard copies of EIA Report, Executive Summary in English & Tamil, submitted by the Project Proponent.
7. Petitions received through E-mail, Postal and in the meeting – 19 numbers.

District Environmental Engineer,
Tamilnadu Pollution Control Board,
Tiruvannamalai.

District Revenue Officer,
Tiruvannamalai.

**திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், குண்டியாந்தண்டலம் கிராமம் புல எண். 186/1,190/2B1 & 190/2B2 ல் 2.88.5 ஹெக்டேர் (மொத்த கூட்டு பரப்பளவு 13.07.0 ஹெக்டேர்) பரப்பளவில் உத்தேசிக்கப்பட்டுள்ள திரு.A. தசரதன் கல் மற்றும் கிராவல் குவாரி நடத்த மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றம் அமைச்சகத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு 30.10.2021 அன்று தி/ள். "V.K.P மண்டபம்", காஞ்சிபுரம் - வந்தவாசி சாலை, தர்மாபுரம், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டத்தில் காலை 11.15 மணியளவில் நடைபெற்ற பொதுமக்கள் கருத்து கேட்புரை கூட்ட அறிக்கை விபரங்கள்.**

பங்கேற்றவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | திரு.இரா.முத்துக்குமரசாமி | மாவட்ட வருவாய் அலுவலர்,<br>திருவண்ணாமலை மாவட்டம்,<br>திருவண்ணாமலை. |
| 2. | திரு.தி.ப.விஸ்வநாதன் | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 3. | திரு.N.விஜயராஜ் | வருவாய் கோட்ட அலுவலர்,<br>செய்யாறு கோட்டம்,<br>திருவண்ணாமலை மாவட்டம். |
| 4. | முனைவர்.சி.சுகாஷினி | உதவி பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருவண்ணாமலை. |
| 5. | முனைவர்.ப.தங்கராசு | புவியியலாளர் மற்றும் ஆலோசகர்<br>தி/ள்.ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் &<br>மைனிங் சொலுஷன்ஸ், சேலம். |
| 6. | பொதுமக்கள் மற்றும் சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் | 54 (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது) |

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.**

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை அவர்கள் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு நடைபெறும் பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்திற்கு தலைமைவகிக்கும் மதிப்பிற்குரிய மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களையும், பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிற துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் அனைவரையும் மாசு கட்டுப்பாடு வாரியத்தின் சார்பாக வருக வருக என வரவேற்றார்.

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், குண்டியாந்தண்டலம் கிராமத்தில் 2.88.5 ஹெக்டேர் பரப்பளவில் தி/ள்.A. தசரதன் கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனமானது கல் குவாரி வெட்டி எடுக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்தின் சுற்றுச்சூழல் அனுமதி பெறும் பொருட்டு பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் இன்று நடைபெற உள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை 2006ன் படி தனியாகவோ அல்லது கூட்டாகவோ 5.00 ஹெக்டர் பரப்பளவிற்கு மேல் உள்ள கல் குவாரி சுரங்கத்துக்கு சுற்றுச்சூழல் அனுமதி பெற பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம் நடத்தி பொதுமக்கள் மற்றும் சமுகநல ஆர்வலர்களிடம் கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய் மொழி மூலமாகவோ பெற்று அதனை பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்ப வேண்டியது அவசியமாகும். இது தொடர்பாக மாவட்ட ஆட்சியரின் ஒப்புதலின்படி தி/ள். A. தசரதன் கல் குவாரி நிறுவனத்தின் கல் குவாரி சுரங்கத்துக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் தி/ள். V.K.P மண்டபத்தில் 30.10.2021 அன்று காலை 11.15 மணியளவில் நடைபெறுமென டைம்ஸ் ஆப் இந்தியா மற்றும் தினகரன் செய்திதாள்களில் 28.09.2021 அன்று பொது அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இக்கூட்டத்தில் தொழிற்சாலை நிர்வாகத்தினர் தொடங்க உள்ள தொழிற்திட்டம் மற்றும் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு சம்பந்தமான விவரங்களை உங்களுக்கு விரிவாக எடுத்துரைப்பார்கள். அதன் பின்னர் பொதுமக்கள் மற்றும் சமுக ஆர்வலர்கள் தங்களது கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ தெரிவிக்கலாம். பொதுமக்கள் தங்கள் பெயர், ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு தங்கள் கருத்துக்களை தெரிவிக்க வேண்டும். தங்களுடைய கருத்துக்களை முறையாக பதிவு செய்து மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்படும் என தெரிவித்தார்.

**முனைவர்.ப.தங்கராசு, புவியியலாளர் மற்றும் ஆலோசகர், தி/ள்.ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் & மைனிங் சொலுஷன்ஸ், சேலம்.**

முனைவர்.ப.தங்கராசு, புவியியலாளர் மற்றும் ஆலோசகர் அவர்கள் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களுக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்களுக்கும்,

சுற்றுச்சூழல் ஆர்வலர்கள், பிறத்துறையைச் சேர்ந்த அரசு அதிகாரிகள் மற்றும் பங்கேற்க வந்துள்ள பொதுமக்கள் அனைவரையும் தி/ள்.ஜியோ எக்ஸ்ப்ளோரேஷன் & மைனிங் சொலுஷன்ஸ், சேலம் நிறுவனத்தின் சார்பாக பணிவுடன் வரவேற்று நிழற்பட விளக்க காட்சி மூலம் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழிற்திட்டம் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்கள்.

**உதவி பொறியாளர்.**

தற்போது பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாகவோ, வாய்மொழி மூலமாகவோ வழங்கலாம் என குறிப்பிட்டார். கருத்துகள் பதிவு செய்யும் முன் பொதுமக்கள் தங்கள் பெயர், தங்கள் ஊரின் பெயர் ஆகியவற்றை குறிப்பிட்டு கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று தெரிவித்தார்.

அதன்படி பொதுமக்கள் தங்களுடைய கருத்துக்களை கீழ்க்கண்டவாறு தெரிவித்தனர்.

**1.திரு. லஷ்மணன், குண்டியாந்தண்டலம்.**

இவர் இந்த குவாரி வருவதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்தார்.

**2. திரு. ஞானபிராகசம், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர், குண்டியாந்தண்டலம்.**

இந்த கல் குவாரி வருவதற்கு எங்களுக்கு எந்த விதமான ஆட்சேபனையும் இல்லை. ஏழாச்சேரி மருத்துவமனைக்கு செல்லும் சாலை குண்டும் குழியுமாக உள்ளது. இதனை சரி செய்து தரவேண்டும் எனவும், கல் குவாரியில் வெடி வைப்பது எவ்வித முன் அறிவிப்புமின்றி செயல்படுகிறார்கள். இதனை கண் காணிக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

**3.திரு.சுரேஷ்பாபு, சோதியம்பாக்கம்.**

சின்ன ஏழாச்சேரிக்கும் குண்டியாந்தண்டலத்துக்கும் இடையே உள்ள மருத்துவமனைக்கு செல்லும் சாலையில் ஏற்பட்டுள்ள பழுதினை சரி செய்து தரவேண்டும் என்றார். அந்த சாலையில் எத்தனை கல் குவாரிகளுக்கு அனுமதி கொடுப்பீர்கள் என்று தெரியவில்லை என்றார். மேலும், குவாரியில் இருந்து செல்லும் வாகனங்களால் தூசிகள் அதிகமாக ஏற்படுகிறது என்றார். குண்டியாந்தண்டலத்துக்கும் மாமண்டூருக்கும் இடையே உள்ள சாலையில் உள்ள பழுதினை சரி செய்து தரவேண்டும் என்றார். சாலையின் தரம் பொதுமக்கள் பயன்படுத்தும் அளவில் தான் உள்ளது குவாரி வாகனங்கள் செல்லும் அளவு தரமானதாக இல்லை எனவும் தெரிவித்தார். கனிம நிதி மூலம் சாலை பழுதினை சரி செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

குவாரி சுற்றிலும் மரம் நடுவதுமில்லை, மூன்று மாதத்திற்கு ஒரு முறை நடத்தப்படும் என்று கூறிய மருத்துவ முகாமும் நடத்தப்பட வில்லை. இதை செய்தால் பயனுள்ளதாக

அமையும். மேலும், குண்டியாந்தண்டலம் கிராமத்தை சுற்றியுள்ள கிராமங்களுக்கும் கனிம வள நிதியினை பிரித்து தர வேண்டும் எனக் கூறினார்.

3. திரு.ஆறுமுகம், சின்ன ஏழாச்சேரி.

இந்த குவாரியால் பத்து ஊர்கள் பாதிக்கப்பட்டுள்ளது. சாலைகள் மிகவும் பழுதாகியுள்ளது. 20-30 வருடமாக நாங்கள் அவதிக்கு உள்ளாகிறோம். ஏன் இந்த கிராமங்களை சுற்றிச்சுற்றி குவாரிகளுக்கு அனுமதி கொடுக்கிறீர்கள். இந்த வழியே வரும் குவாரி வாகனங்கள், வாகன உரிமம் இன்றி ஓட்டி செல்கின்றனர். குவாரி உரிமையாளர்கள், குவாரியை சுற்றிலும் உள்ள 50-60 ஏக்கர் நிலங்களை வாங்கிக்கொண்டு எங்களை விவசாயம் செய்ய விடாமல் நிலத்தை விற்றுவிடுங்கள் என்று மிரட்டுகிறார்கள். இதனால் மக்களுக்கு பாதுகாப்பு இல்லை என்றார். இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார். பொதுமக்களுக்காகத் தான், இங்கு வந்து இந்த கருத்துக்களை பதிவு செய்ததாக தெரிவித்தார்.

4.திரு. ராஜாராம், ஊராட்சி மன்ற தலைவர்,குண்டியாந்தண்டலம்.

குண்டியாந்தண்டலம் சாலைகளை சரி செய்ய ஏற்கனவே தீர்மானம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.விரைவில் அந்த சாலைகள் சரி செய்யப்படும் என கூறினார். குண்டியாந்தண்டலம் கிராமத்தை சுற்றியுள்ள கிராமங்களுக்கும் கனிம வள நிதியினை பிரித்து தர கூடாது. பாதிக்கப்பட்ட குண்டியாந்தண்டலம் கிராமத்திற்கு மட்டுமே இந்நிதியினை வழங்க வேண்டும் என்று கேட்டார்.

**பின்னர் கருத்துக்கள் எதுவும் பெறப்படவில்லை.**

**உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை.**

இக்கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி தெரிவித்து இக்கூட்டம் நிறைவு பெறுகிறது என்று உதவி பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருவண்ணாமலை கூறினார்.

**இது தவிர கீழ்கண்ட விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.**

1. பொதுமக்கள் கருத்துக் கேட்பு கூட்ட விவரம் பத்திரிக்கை வெளியீட்டின் நகல்(தமிழ் மற்றும் ஆங்கிலம் நாளேடுகள், நாள்.28.09.2021)

2. துண்டுபிரசுரம் மற்றும் தண்டோரா அறிவிப்பு - கிராம நிர்வாக அலுவலரால் வழங்கப்பட்ட சான்று.
3. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு கலந்துகொண்டவர்களின் வருகை பதிவேடு.(4 பக்கங்கள் 54 நபர்கள்)
4. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறுந்தகடு (DVD).
5. பொதுமக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின்போது எடுக்கப்பட்ட புகைப்படங்களின் தொகுப்பு.
6. திட்ட நிறுவனத்தாரால் சமர்பிக்கப்பட்ட சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை மற்றும் திட்ட சுருக்கம்(தமிழ் மற்றும ஆங்கிலம்).
7. தபால், மின்னஞ்சல் மற்றும் பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் பெறப்பட்ட 19 மனுக்கள்.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருவண்ணாமலை.

மாவட்ட வருவாய் அலுவலர்,
திருவண்ணாமலை.